தமிழும் தமிழரும்

T14346
R005D01
T.14346

முனைவர் இரா. இளவரசு

நமது குடும்பம்
தமிழ்க் குடும்பமாக விளங்க....

- நம்முடைய பெயர், பிறமொழியில் அமைந்திருந்தால் அதனைத் தமிழ்ப்படுத்திக் கொள்வோம்!
- நம் குழந்தைகளுக்கு இனிய தமிழ்ப் பெயர்களைச் சூட்டி மகிழ்வோம்!
- எல்லா இடத்திலும் தமிழிலேயே கையொப்பமிடுவோம்!
- அனைத்துக் கல்வித் துறைகளையும் தமிழ் வாயிலாகவே பயில்வோம்!
- கடவுள் நம்பிக்கையும், வழிபாடு செய்ய விருப்பமும் உடையவர்களைத் தமிழிலேயே வழிபாடு செய்ய வற்புறுத்துவோம்!
- திருமணம் முதலிய இல்லச் சடங்குகளைத் தமிழிலேயே நடத்துவோம்!
- பிறமொழிக் கலப்பைப் தவிர்த்துத் தமிழிலேயே பேசுவதையும் எழுதுவதையும் நடைமுறைப்படுத்துவோம்!
- தமிழ் ஆண்டாகத் திருவள்ளுவராண்டினை நடைமுறைப் படுத்துவோம்!
- சாதியையும், சாதிப்பட்டங்களையும் தூக்கி எறிந்துவிட்டுத் தமிழன் என்று தலைநிமிர்ந்து சொல்வோம்!
- தீண்டாமைக் கொடுமைக்கு எதிராகவும் பெண்ணடிமைத் தனத்துக்கு எதிராகவும் போராடுவோம்!

தமிழும் தமிழரும்

முனைவர் இரா. இளவரசு

மருத்துவர் இள. அன்பு

மருத்துவர் து.ச. கௌதமன்

மன்றல் விழாச் சிறப்பு வெளியீடு

28-5-1997

மன்றல் விழா

மணமகள் : மரு. **இள. அன்பு**

மணமகன் : மரு. **து.ச. கெளதமன்**

வரவேற்பு : முனைவர் **இரா. இளவரசு**

தலைமை : மாண்புமிகு முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்**
தமிழ் ஆட்சிமொழி-பண்பாட்டுத்துறை அமைச்சர்

வாழ்த்து : திருமிகு **சு.த. காசிராமன்,** இ.ஆ.ப. (ஓய்வு)

திருமிகு **அ. பால்ராசு,** இ.ஆ.ப.
தலைவர், எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்

முனைவர் **சிலம்பொலி சு. செல்லப்பன்**

திருமிகு **துரை கலியரெத்தினம்**
நடுவர், கடன் வசூல் தீர்ப்பாயம்

திருமிகு **ஆ. இராசா**
பெரம்பலூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்

திருமிகு மருத்துவர் **து. திருமூர்த்தி**

நன்றி : முனைவர் **கு. திருமாறன்**

மருத்துவர்

இள. அன்பு

மருத்துவர்

து.ச. கௌதமன்



பெற்றோர்

இரா. இளவரசு

இரா. வேலம்மாள்

து. சந்திரசேகரன், எம்.எசி.,

ச. சரோசினி

ஆண் பெண் நிகர்

ஆண்உயர் வென்பதும் பெண்உயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை
வாணிகம் செய்யலாம் பெண்கள்... நல்
வானூர்தி ஓட்டலாம் பெண்கள்!
ஆணுயர் வென்பதும்...

ஏணை அசைத்தலும் கூடும்; - அதை
யார் அசைத் தாலுமே ஆடும்!
வீணை மிழற்றலும் கூடும்; - அது
மெல்லியின் விலுக்கா வாடும்?
நாணமும் அச்சமும் வேண்டும்-எனில்
ஆணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும்.
ஆணுயர் வென்பதும்...

சேயிழை மார்நெஞ்ச மீது - நாம்
சிறுபுலி யைக்காணும் போது
தீயதோர் நிலைமைஇங் கேது? - நம்
தென்னாட்டில் அடிமைநில் லாது.
தூயராய்த் தொண்டாற்ற வேண்டும் - பல
தொழிற்கல்வி யுங்கற்க வேண்டும்.
ஆணுயர் வென்பதும்...

- **பாவேந்தர்**

தமிழும் தமிழரும்

அன்பிற்குரிய தமிழர்களே!

உங்களோடு சில சொற்கள்! நிறைய பேச வேண்டும்! நேரம் இல்லை. ஆதலால் சில சொற்கள்! அறிவுரையாக அன்று; அன்புரையாக! பட்டறிவு நிகழ்ச்சிகள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்கிறேன்.

இன்று மணவிழா காணும் எம் மகள் இள. அன்பு பிறந்து (12.6.1971) இரண்டு நாட்களில் அந்தச் செய்தியை அறிவிக்குமுகமாக நண்பர்களுக்கு ஒரு வெண்பா எழுதினேன்.

என்மனைவி வேலம்மாள் இன்றமிழே என்னுமொரு
பெண்மகவைத் தந்தாள் பிறங்கும் சனிக்கிழமை
தாய்சேய் நலமே; தளிர்மகவை வாழ்த்துமினே!
பாய்பொன்னி நெஞ்சீர் பரிந்து!

‘வாழ்த்துமினே’ என்று தலைப்பிட்டு அஞ்சலட்டையில் விடுத்த இந்த அறிவிப்பைக் கண்ணுற்ற நண்பர்கள் பலரும் நெஞ்சார வாழ்த்தினர்.

‘இனிய தமிழை ஒத்த பெண் குழந்தை’ என்று பிறந்த அன்று பாடினேன். அந்தக் குழந்தை வளர்ந்து இல்லறப் பொறுப்பேற்கும் இன்று ‘இனிய தமிழ்’ - நம் தாய்மொழி எப்படியிருக்கிறது என்பது பற்றிச் சில செய்திகளைக் கனத்த நெஞ்சத்தோடு பகிர்ந்துகொள்கிறேன்.

சுவாமி வேதாசலத்தை மறைமலையடிகள் ஆக்கித் தனித்தமிழியக்கம் கருக்கொள்ளச் செய்ததும் தேவநேசக் கவிவாணனைத் தேவநேயப்பாவாணராக்கித் தனித்தமிழியக்கம் உருக்கொள்ளச் செய்ததும் இத்தகைய நிகழ்வுகள்தாம்!

ஆட்சியில் தமிழ் எப்படியிருக்கிறது?

கல்வியில் தமிழின் நிலை என்ன?

முறைமன்றங்களில், கோயில்களில் தமிழ் இருக்கிறதா? மக்கள் தொடர்பு ஊடகங்கள் தமிழை மதிக்கின்றனவா? என்றெல்லாம் அறிஞர்களும் அமைப்புகளும் வினா எழுப்பி விடிவு காணப் பல்லாண்டுகளாக முயன்று வருகின்றனர். அவர்களுக்கெல்லாம் என் அகம் நிறைந்த நன்றி.

இந்தத் திருமண நினைவுச் சிறுவெளியீடு, தமிழர்களின் அன்றாட வாழ்வில், வாழ்வியற் கண்ணோட்டத்தில் தமிழ் எப்படியிருக்கிறது? எப்படி இருக்கவேண்டும்? என்ற சில சிந்தனைகளை உங்கள் முன் வைக்கிறது.

அதிகச் செலவோ, தொல்லையோ இல்லாமல் 'நாம் தமிழர்கள்' என்ற உணர்வோடு தாழ்வு மனப்பான்மையை உதறித்தள்ளி எளிதில் கடைபிடிக்கத்தக்க செய்திகள் சில முன்வைக்கப்படுகின்றன. முன்னரே நாம் அறிந்தவைதாம் என்றாலும் நமக்குத் தேவையானவற்றை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக்கொள்வது நம்மை மேம்படுத்தும் என்ற நல்ல நோக்கத்துடன் இந்தச் செய்திகள் உங்கள்முன்.

உங்கள் தமிழ்

நான் உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது நடந்த நிகழ்ச்சி இது!

நண்பகல் இடைவேளையின்போது எங்கள் தமிழாசிரியர்க்கும் ஆங்கில ஆசிரியர்க்கும் ஒரு சிறு சொற்போர்! தென்னங் கீற்றால் வேயப்பட்டு மூங்கிற் பிளாய்ச்சுகளால் பக்கங்கள் அடைக்கப்பட்ட அறையில் இருவரும் பேசிக்கொண்டிருக்கின்றனர். நாங்கள் நான்கைந்து மாணவர்கள் அறையின் வெளியே நின்று மூங்கிற் பிளாய்ச்சுகளின் இடைவெளி வழியே அவர்களைப் பார்த்தவாறே கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

ஆங்கில ஆசிரியர் '**எங்கள் ஆங்கிலத்தில்** உள்ள சொல்வளத்தை **உங்கள் தமிழ்** உட்பட வேறு எந்த மொழியிலும் காண இயலாது' என்கிறார்.

தமிழாசிரியரோ '**எங்கள் தமிழின்** சொல்வளத்திற்கு **உங்கள் ஆங்கிலம்** ஈடாகாது' என்கிறார். ஆங்கிலத்தின் சிறப்பை மெய்ப்பிக்க அவர் சில சொற்களையும் தமிழின் மேன்மையை நிலைநாட்ட இவர் சில சொற்களையும் எடுத்துக்காட்டிக் காரசாரமாக விவாதிக்கின்றனர்.

ஆசிரியர்கள் இருவரும் தமிழர்கள். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். ஒருவர் மற்றவரைப் பார்த்து '**உங்கள் தமிழ்**' '**எங்கள் ஆங்கிலம்**' என்றும் '**உங்கள் ஆங்கிலம்**' '**எங்கள் தமிழ்**' என்றும் பேசுவதுதான் நாம் மனங்கொள்ள வேண்டிய செய்தி. பாடம் நடத்தும் மொழிச்சார்பினால்தான் இப்படிப் பேசுகின்றனர் என்று இதனை எளிதாக ஒதுக்கிவிட முடியாது. இங்குத் 'தமிழ் என்பது தமிழாசிரியர்க்கு உரியது' என்னும் கருத்து இழையோடுவதைக் காணலாம்.

நீங்கள் தி.மு.க....?

இருபதாண்டுகள் முன் நானும் இரண்டு பேராசிரிய நண்பர்களும் ஓர் அதிகாரியைக் காணச் சென்றோம். தூய கதருடையில் காட்சியளித்த அவரிடம் எங்கள் பெயர்களைக் கூறி அறிமுகப்படுத்திக் கொண்டோம். என் பெயரைக் கேட்டதும் 'இது உங்கள் பெற்றோர் வைத்த பெயரா? நீங்கள் மாற்றிவைத்துக் கொண்டதா?' என்று வினவினார். 'மாற்றிக்கொண்ட பெயர்' என்றேன். பெயர் மாற்றம் செய்வது சரியில்லை என்னும் கருத்தைக் கொண்ட அவர் நெடுஞ்செழியன், அன்பழகன் முதலிய பெயர் மாற்றங்களை நினைவுபடுத்தி 'நீங்கள் தி.மு.க. காரரென்று நினைக்கிறேன்' என்று முத்திரை குத்தினார். கம்பன் 'ரத்தாக்ஷன்' என்னும் பெயரைக் 'குருதியின் கண்ணன்' என்றும்

வீரமாமுனிவர் 'ஜோசப்' என்னும் பெயரை 'வளன்' என்றும் சூரிய நாராயண சாஸ்திரி தன் பெயரைப் பரிதிமாற்கலைஞன் என்றும் தமிழாக்கி வழங்கியுள்ளதை நான் குறிப்பிட்டேன். சிறிது எரிச்சலடைந்த அவர் 'இருக்கலாம், ஆனால் தி.மு.க.காரர்கள்தான் சுத்தத்தமிழ், அது இது என்று சொல்கிறவர்கள்' என்றார்.

குடியரசுத்தலைவர் ஆட்சி நடந்துகொண்டிருந்த காலம் அது! நாங்கள் அவரிடம் எதற்காகச் சென்றோமோ அந்த வேலை நிறைவேறாமல் போனதற்கும் இந்த உரையாடல் ஒரு காரணமாக அமைந்துவிட்டது.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் நமக்கு எதனை உணர்த்து கின்றன? 'தமிழ்மொழி தமிழாசிரியர்களுக்கு உரியது, தமிழ்ப் பற்றுடையவர்கள் திமுக சார்பினர், தமிழ் உணர்ச்சி திமுக வினர்க்கு உரியது' என்பதான ஒரு கருத்தோட்டம் வேரூன்றி யிருப்பதை இவை உணர்த்துகின்றன.

சிறப்பு நிலைக் கல்வியால் தமிழ் தமிழாசிரியர்க்கு அதிகத் தொடர்புடையதாக இருந்தாலும் பொதுநிலை உரிமையால் ஆங்கில ஆசிரியர் உள்ளிட்ட அனைத்து ஆசிரியர்க்கும் அதுவே தாய்மொழி! அரசியல் கட்சிகளில் மக்கள் இயக்கமாகத் தமிழ் உணர்ச்சியைக் கொண்டு சென்றதில் திமுகவுக்குத் தலையாய இடமுண்டு, என்றாலும் 'அவர்கள்தான் தமிழுக்கு' என்னும் நினைப்பு அடிப்படை வளர்ச்சிப் பணிகளை மேற்கொள் ளாமைக்குக் காரணமா யமைந்தது.

தாய்மொழி யுணர்ச்சியைக் குறுகிய கண்ணோட்டம் என்று கருதிய 'விரிந்த' மனப்பான்மைத் 'தேசியவாதி'களும் தமிழ் உணர்ச்சியைத் திமுக வுக்குச் சொந்தமாக்கும் பணியைத் தொடர்ந்து செயதனர். பாரதி, திருவிக, வஉசி தொடங்கி மபொசி வரை தமிழ் வளர்த்தவர்களோடு தங்களை இணைத்துக் காண மறந்தனர். மறுத்தனர். அண்மையில் இப்போக்கில் வரவேற்கத்தக்க மாற்றம் தென்படுகிறது.

அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை இடதுசாரிகள் - குறிப்பாக மூன்றாவது அணியினர் என்று குறிப்பிடப்படும் குழுவினர் தமிழ் வளர்ச்சிப் பணிகளைக் கருத்தியல் அளவில் முன்னெடுக்கின்றனர்.

தமிழ் என்பது ஏதோ ஒரு பிரிவினர்க்கு மட்டும் உரியதன்று; அது தமிழர் அனைவர்க்குமான பொதுச்சொத்து. **தமிழ் நம் சொத்து. அந்தச் சொத்தால் நாம் செழிப்போம். நம்மால் அந்தச் சொத்து தழைக்கும்** என்னும் மனப்பான்மை கட்சி, சாதி, தொழில் முதலிய வேறுபாடுகள் கடந்து எல்லாத் தமிழர்களுக்கும் ஏற்படவேண்டும். இந்த உணர்வுடன் சில நல்ல முயற்சிகள் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தங்கள் மொழி என்று வருகின்றபோது வங்காளிகள் ஒன்றுபடுகின்றனர். கன்னடர்கள் வேறுபட்டு நிற்பதில்லை. நாம் ஏன் வேறுபட்டுப் போரிட்டுக் கொள்ள வேண்டும்?

தமிழோடு வாழ்பவன் தமிழன்

நம் ஊரின் பேருந்து நிலையத்தையொட்டி ஒருவர் தேநீர்க் கடை வைத்திருக்கிறார். அவரை 'மலையாளி' என்கின்றனர். நம் பக்கத்து வீட்டுப்பகுதிக்கு வாடகைக்குக் குடியேறியிருக்கிறார் ஒருவர். அவரைத் 'தெலுங்கர்' என்கின்றனர். இவ்வாறு அழைப்பதற்குக் காரணம் என்ன? மலையாள மொழியைப் பறைபவராதலால் ஒருவரை 'மலையாளி' என்றும் தெலுங்கு மொழியைச் செப்புவதால் ஒருவரைத் 'தெலுங்கர்' என்றும் அழைக்கிறோம். அதைப்போலத் தமிழ்மொழியை வழிவழியாய்ப் பேசுவோரைத் தமிழர் என்கின்றனர். தமிழ்மொழிக்கும் நமக்கும் தொடர்பில்லை என்றால் நம்மைத் தமிழர் என்று எப்படி அழைக்க முடியும்?

பாலைத் திணையைப் பாடுவதில் புகழ்பெற்ற பெருங்கடுங்கோ, நெஞ்சை அள்ளும் சிலம்பை இசைத்த

இளங்கோவடிகள், பெருமாள் திருமொழி பாடிய குலசேகர ஆழ்வார், ஆதியுலா பாடிய சேரமான் பெருமாள் நாயனார் முதலிய பற்பலர் தமிழ்ப் பாட்டிசைத்த மண் இன்று தமிழ்நாடாக இல்லை. மலையாள நாடாக மாறிவிட்டது. மேற்குத் தமிழ்நாடாகிய சேர நாட்டுத் தமிழர் இன்று தமிழர்களாக இலர். மலையாளிகள் என்று அழைக்கப்படுகின்றனர். காரணம் என்ன? தமிழ் அவர்களோடு இல்லை அல்லது அவர்கள் தமிழோடு இல்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது? எவன் தமிழோடு வாழ்கிறானோ, தமிழ் எவனோடு வாழ்கிறதோ அவனே தமிழன்.

சேரிமொழி

சில ஆண்டுகளின்முன் சென்னை நகரில் நடந்த நிகழ்ச்சி இது. என் அன்புக்குரிய தங்கையொருவர். கல்லூரிப் பேராசிரியர். வேறொரு கல்லூரியில் வேலைபார்க்கும் தன் தோழியின் வீட்டிற்குச் செல்கிறார். தோழிக்கு இரண்டு பெண் குழந்தைகள். மூத்த குழந்தையைப் பார்த்து 'நீ என்னடியம்மா படிக்கிறே' என்று தமிழில் கேட்கிறார். தமிழ்க் குடும்பத்தைச் சார்ந்த அந்தக் குழந்தை உடனே தன் தாயை நோக்கி 'அம்மா, அம்மா! ஏன் இந்த அத்தை சேரிமொழியில் பேசுகிறார்? (Mummy, Mummy! Why this aunty speaks in slum language?) என்று ஆங்கிலத்தில் கேட்கிறது? இது கற்பனையல்ல. தமிழர்களே, நடந்த நிகழ்ச்சி! விழுங்கியாக வேண்டிய வேதனை கலந்த உண்மை!

இது எதனை உணர்த்துகிறது? தமிழ் என்பது சேரிப் பகுதிகளில் வாழும் வாய்ப்பு வசதியற்ற ஏழை எளிய தாழ்த்தப் பட்ட மக்கள் பேசும் மொழி. மேன்மக்கள் அம்மொழியில் பேசக்கூடாது என்பதைத்தானே! குழந்தை என்ன செய்யும்? அதன் பிஞ்சுநெஞ்சில் நஞ்சு பாய்ச்சப்பட்டிருக்கிறது. படிப்பறிவு வாய்ந்தோர் மேலான பதவிகளில் வீற்றிருப்போர், பணம் படைத்தோர் ஆகிய 'மேன்மக்கள்' தீந்தமிழ் நாட்டில் வாழ்ந் தாலும் தங்கள் குழந்தைகள் தேம்சு ஆற்றில் நீந்தி இலண்டன்

மாநகரக் காற்றை உயிர்த்துவளர வேண்டும் என்று தானே மயங்கிக் கிடக்கின்றனர்.

காஞ்சிபுரம் சங்கரமடம் பெரியவர் சந்திரசேகர சுவாமி களைக் காணத் திட்டமிட்டவாறு செல்கிறார் ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார். காண்கிறார். உரையாடல் நிகழ்கிறது. பெரியவர் சமற்கிருதத்தில் பேசுகிறார். பிறிதொருவர் அதனைத் தமிழாக்கி இராமலிங்கனார்க்குத் தெரிவிக்கிறார். தமிழ் அறிந்த தமிழராகிய பெரியவர் தமிழில் பேசியிருக்கலாமே என்ற உணர்வோடு விடைபெற்று வெளிவந்த இராமலிங்கனார் உடன்வந்த மொழிபெயர்ப்பாளரிடம் 'ஏன் சுவாமிகள் தமிழில் பேசவில்லை' என்று வினவுகிறார். அதற்கு அவர், உரையாடல் நடந்த நேரத்தைக் குறிப்பிட்டு 'இந்த நேரத்தில் சுவாமிகள் நீசபாஷையில் பேசமாட்டார்' என்கிறார்.

இதன் பொருள் என்ன? தமிழ் நீசபாஷை - இழிந்தோர் மொழி! குறிப்பிட்ட நேரங்களில் அம்மொழியில் பேசக்கூடாது. 'தேவபாஷை'யான சமற்கிருதத்தில்தான் பேசவேண்டும் என்பதுதானே!

வழிவழியாகப் 'பைசாச பாஷை' 'சூத்திர பாஷை' என 'மேலோர்'களால் குறிப்பிடப்பட்டதன் தொடர்ச்சிதான் 'நீசபாஷை'! சென்னைச் சிறுமி 'சேரிமொழி' என்றதற்கும் காஞ்சிப் பெரியவர் 'நீசபாஷை' எனக் கருதியதற்கும் பெரிதாக வேறுபாடில்லை! 'இழிந்தோர் மொழி தமிழ்' என்பதால்தானே கோவில்களில் சமற்கிருதம் கோலோச்சுகிறது!

சோறு-சாதம்-ரைஸ்

நெல்லையில் ஒரு நண்பரின் வீட்டில் நண்பகல் உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். நண்பரின் துணைவியார் மகிழ்ச்சியோடு உணவு பரிமாறுகிறார். இலையில் மீண்டும் மீண்டும் உணவிட முனையும்போது "போதுங்க சோறு

போதுங்க'' என்கிறேன். உணவு முடித்து விடைபெறுகிறேன். வழியனுப்ப உடன்வரும் நண்பர் என்னிடம் ''நீங்க சோறு போதும் சோறு போதும் என்று சொன்னதைக் கேட்ட என் மனைவி, அவர் தாழ்த்தப்பட்டவரா? என்று கேட்டாள். நான் இல்லையென்றேன்'' என்று சிந்திக்கவேண்டிய செய்தி யொன்றைக் குறிப்பிட்டார். ஆம், தமிழர்களே! ஆம். மேல்சாதிக்காரர்கள் பலரும் 'சாதம்' என்கின்றனர். படித்த 'மேன்மக்கள்' 'ரைஸ்' என்கின்றனர். தூய தமிழ்ச்சோறு சாப்பிடுபவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்!

'நமஸ்காரம்'

சிறுநகை வாணிகர் சங்கத் தலைவர் ஒருவர்! எனக்கு அறிமுகமான போது 'நமஸ்காரம், நமஸ்காரம்' என்றுதான் வணக்கந் தெரிவிப்பார். நாங்களிருவரும் நெருங்கிப் பழகப் பழக 'நமஸ்காரம்' விடைபெற்றுக்கொண்டு 'வணக்கம்' அவர் வாயில் மணக்கத் தொடங்கியது. நண்பர், சங்கத் தலைவராதலால் பலதரப்பு வாணிகர்களும் அவரைப் பார்க்க வருவார்கள். அவர்களிடம் 'நமஸ்காரம்' தெரிவித்து வந்த நண்பர் 'வணக்கம்' கூறத் தொடங்கியதும் 'என்ன இது? தலைவர் இப்படி ஆகிவிட்டார்' என்று வருந்தியிருக்கிறார்கள். தலைவரின் 'மாற்று' அவர்கள் உரைகல்லில் குறைந்துபோய்விடுகிறது! 'நமஸ்காரம்' என்பது 'மேலோர்'களின் வழக்காகத்தானே இன்றும் நிலவுகிறது.

தங்களைப் 'புதிய மேலோர்'களாக்கிக் கொள்ள விரும்பும் அடிநிலைத் தமிழர்கள் சிலரும் பூணூல் போட்டுக்கொள்வதைப் போலவே 'நமஸ்காரம்' தெரிவிப்பதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். படித்த தமிழர்களிடையே 'குட்மார்னிங்' 'குட்ஈவினிங்' பழக்கமும் பரவி வருகிறது.

சோறு என்பது தாழ்த்தப்பட்டோர் வழக்கு, 'சாதம்' 'ரைஸ்' என்பன உயர்ந்தோர் வழக்கு. 'வணக்கம்' என்பது உயர்ந்தோர்

வழக்கன்று. 'நமஸ்காரம்' 'குட்மார்னிங்' என்பன உயர்ந்தோர் வழக்கு என்னும் இந்தப் போக்கு எதனைக் காட்டுகிறது? தமிழன் தனக்குரியதை இழப்பதன் மூலம் பிறர்க்குரியதை ஏற்பதன்மூலம் 'உயர்ந்தவன்' ஆகிறான்; தமிழோடு வாழ்கிற தமிழன் தாழ்ந்தவனாகிறான் என்பதைத்தானே!

பெயர்களைச் சிதைக்காமல்...

நம் கல்லூரியின் பெயர் என்ன?

'பிரசிடென்சி காலேஜ்'

கல்லூரி இருக்கும் இடத்தின் பெயர்?

'டிரிப்ளிகேன்'

பெரும்பாலான மாணவர்கள் இப்படித்தான் சொல்கிறார் கள். மாணவர்கள் மட்டுமா? படித்தவர்கள் பலரும் திருவல்லிக் கேணியை 'டிரிப்ளிகேன்' என்றுதான் குறிப்பிடுகின்றனர். இந்தச் சொல்லை இவர்கள் வழியாகக் கேட்டுக் கேட்டுப் பழகிவிட்ட படிக்காத மக்களும் 'டிரிப்ளிகேன்' என்றே குறிப்பிடுகின்றனர். 'டிரிப்ளிகேன்' என்று கேட்டுப் பழக்கப்பட்டுவிட்ட பேருந்து நடத்துநர்களிடம் திருவல்லிக்கேணி என்று சீட்டுக் கேட்டால் ஏதோ புதிய ஊர்போலும் என்று எண்ணத் தொடங்கிவிடு கின்றனர்.

நம் முன்னோர்கள் இயற்கை வளங்களின் அடிப்படையில் குடியிருக்கும் ஊர்களுக்கு அழகு அழகான பெயர்களை வைத்தனர். அல்லிமலர்கள் பூத்துக் குலுங்கும் குளங்கள் நிறைந்திருந்த அழகிய பகுதியைத் 'திருஅல்லிக்கேணி' என்றனர். மருதவளம் மிகுந்து நெல் விளைந்த பகுதியைத் 'திருநெல்வேலி' என்றனர். அலைகள் பாடிக்கொண்டிருக்கும் கடற்கரையில் அமைந்த நகரைத் 'தரங்கம்பாடி' என்று கவிதை நயத்தோடு அழைத்து மகிழ்ந்தனர். இத்தகைய அழகிய ஊர்ப்பெயர்களை ஒலி மாறாமல் உச்சரிக்க ஆங்கிலேயர்களால் இயலவில்லை.

அவர்கள் நாக்கு இத்தகைய ஒலிச்சேர்க்கைகளுக்குப் பழக்கப்படவில்லை. படிக்காத நம்மூர்த் தமிழர்கள், தமிழ் ஒலிமரபுக்கேற்ப ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்களை ஒலிப்பதைப் போலவே தமிழுக்கு அயலவர்களான ஆங்கிலேயர்களும் தமிழ்ப் பெயர்களை ஒலிப்பார்களாயினர். 'திருநெல்வேலி' 'டின்னவேலி' ஆனது. தரங்கம்பாடி 'டிரங்கபார்' ஆனது. ஆங்கிலேயர்களுக்கு அவ்வாறு ஒலிப்பது இயல்பானது. ஆனால் தமிழர்களும் ஆங்கிலேயர்களைப் போல தம் ஊர்ப் பெயர்களை ஏன் உச்சரிக்க வேண்டும்? படித்தவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ள அந்த உச்சரிப்பு பயன்படும் என்று கருதுகிறார்கள். ஆங்கிலேயன் எடுத்த 'வாந்தி'யை அமிழ்தாகக் கொள்வது அழகாகுமா? எந்த மொழியில் பேசும்போதும் நம் ஊர்ப் பெயர்களை நம் மொழி மரபுப்படி நாம் ஒலிப்பதுதானே முறை. உலகம் முழுவதும் இந்த நடைமுறைதான் பின்பற்றப் படுகிறது. திருவல்லிக்கேணி என்னும் அழகிய பெயரை 'Triplicane' என்று எழுதுவதை - உச்சரிப்பதைத் தவிர்க்க வேண்டும். 'Trivandrum' என்பதைவிட Thiruvananthapuram சற்று நீளமாக இருக்கிறது. எனினும் இப்போது திருவனந்தபுரம் சிதையாமல் பாதுகாக்கப்படுவதைப் போல நமக்குரியவற்றை, நம் வரலாறு, பண்பாட்டிற்கு வளஞ்சேர்ப்பவற்றை நாம் காப்பாற்றியாக வேண்டும்.

தமிழா டமிலா?

நாவலர் நெடுஞ்செழியன் ஒரு செய்தியைச் சொன்னார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்த சீனிவாச சாத்திரியார் ஆங்கிலத்தில் உரையாற்றும்போது தமிழ் என்னுஞ் சொல்லை 'டமில்' (Tamil) என்று உச்சரிக்க மாட்டாராம். அவ்வாறு நாம் உச்சரிக்கக் கூடாது, அது பிழை என்பதோடு 'தமிழ்' (Thamizh) என்றே குறிப்பிட வேண்டும் என்று வலியுறுத்துவாராம்.

ஆங்கில மொழியில் ஆற்றல் வாய்ந்த பேச்சாளராக அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் அவர். அவரின் அறிவு நேர்மை அனைவராலும் போற்றத்தக்கது.

பாரதியின் சாடல்

பாரதி வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி! புதுச்சேரியிலுள்ள கடல் பாலப்பகுதி! பாரதி, வரா, வவேசு, திருச்சியைச் சார்ந்த வழக்கறிஞர் முதலியோர் உரையாடிக்கொண்டிருக்கின்றனர். வவேசுவை நோக்கி வழக்கறிஞர் 'ஏன் சார்! ஒங்க டிலக் இப்போ எங்கே இருக்கான்?' என்று கேட்கிறார்.

பாரதியார்க்குச் சினம் ஏற்படுகிறது.

''ஏண்டா! நீ தமிழன் இல்லையா? நீ வெள்ளைக்காரனா? என்னடா 'டிலக்' வேண்டியிருக்கு? திலகர் என்று சொல்ல உன் நாக்கு கூசுகிறதா?..'' என்று சாடிவிடுகிறார். பாரதியின் சாடல் நமக்கெல்லாம் பாடம்!

இரட்டைப் பெயர்கள்

எழுத்தாள நண்பர் ஒருவர். ஆயிரம் விளக்குப் பகுதியில் தங்கியிருந்தார். எப்போதாவது நாங்கள் சந்திப்போம். காரசாரமாக விவாதம் நடக்கும். தனித்தமிழை ஏற்றுக்கொள்வதில் நண்பர்க்குத் தயக்கம்! ஒருநாள் எங்கள் விவாதம் ஊர்ப் பெயர்ப் பக்கம் திரும்புகிறது. மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் 'ஆக்ஸ்போர்டு' (Oxford) என்னும் பெயரை 'எருதந்துறை' எனத் தமிழ்ப்படுத்தி வழங்குவார். இந்தத் தமிழாக்கம் அன்று நகைச்சுவைக்கு இடமானது. ஊர்ப்பெயர்களை, அவ்வாறே வழங்கவேண்டும் என்பது நண்பரின் நிலை. 'சென்னிமலை'யைச் சிரகிரி என்றும் முதுகுன்றம் அல்லது பழமலையை விருத்தாசலம் என்றும் வடமொழிப்படுத்தி வழங்குவதையும் நல்ல தமிழ்ப்பெயர் மறைந்து போன வரலாற்றையும் நான் குறிப்பிட்டேன்.

நாங்கள் உரையாடிக் கொண்டிருந்தபோது வேறொரு நண்பர் வந்தார். அவரிடம் எழுத்தாள நண்பர் தன்னை இன்னார் என்றும் Thousand Lights-இல் இந்தத் தெருவில் இருப்பதாகவும் அறிமுகப்படுத்திக் கொண்டார். 'ஆயிரம்விளக்கு' என்னும் நல்ல தமிழ்ப்பெயரை அப்படியே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வழங்குவதை நண்பர் உணராமல் இருந்ததுதான் எனக்கு வியப்பாக இருந்தது. ஆங்கிலப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தினால் நமக்குத் தவறென்று தோன்றுகிறது. தமிழ்ப்பெயர்களை ஆங்கிலப்படுத்தி வழங்குவது பெருமைக்குரியதாகக் கருதப்படுகிறது. வண்ணாரப்பேட்டையை 'Washermanpet' என்றும் பட்டினப்பாக்கத்தை 'Foreshore Estate' என்றும் குறிப்பிடும்போதுதான் என்ன பெருமிதம்! இந்த இரட்டை வழக்கு தவறென்று தெரியாத அளவு நம் அறிவு ஆங்கிலத்திற்கு மயங்கிக் கிடக்கிறது!

நாட்டுக்குப் பாடுபட்ட நல்ல தலைவர்கள் பெயர்களை ஊர்களுக்கும் தெருக்களுக்கும் சூட்டுவது உலக இயல்பு. மக்கள் அவர்கள் நினைவைப் போற்ற வேண்டும் என்பது கருத்து. ஆனால் அவர்கள் பெயர்கள் மறைந்துபோகும் அளவுக்கு ஊர்ப்பெயர்கள் குறைந்து திரிந்து வழங்குகின்றன. எஸ்.கே. நகர், கே.கே. நகர், எம்.எம். நகர் என வழங்குவதைக் காண்கிறோம்.

சீதக்காதி எஸ்.கே. ஆகிறார். கலைஞர் கருணாநிதி 'கே.கே.' ஆகிறார். மறைமலை நகர் 'எம்.எம்' ஆகிறது. எல்லாப் பெயர்களையும் சுருக்கி வழங்கும் முயற்சி எளிமை ஒருபுறம். அதற்கு மேலே பெயர்களையெல்லாம் ஆங்கிலமயப்படுத்தி 'S.K.' 'K.K.' 'M.M.' என ஆங்கில முதல் எழுத்துகளை இட்டு வழங்கும் எண்ணப்போக்கு எதை உணர்த்துகிறது? 'சீ.கா.' 'க.க.' 'ம.ம.' என்று தமிழில் சொல்லத் தமிழர்களுக்குத் தோன்றவில்லையே, ஏன்? 'தமிழில் சொல்வது செயற்கையானது. ஆங்கிலத்தில் சொல்வது இயற்கையானது' என்னும் எண்ணம் புரையோடிக் கிடப்பதன் புலப்பாடுதானே இது!

ஆங்கிலத்தில் முதலெழுத்தா?

நான் புதிய வகுப்புகளுக்குச் சென்றவுடன் தனித்தனித் தாள்களில் மாணவர்களின் பெயர், முகவரி முதலிய விவரங்களை எழுதி வாங்குவேன். வாங்கியவுடன் பெயர்களை நோட்டமிடுவேன். P.கண்ணன், K.முத்து, M.பாண்டியன் என்று பெயர்கள் எழுதப்பட்டிருக்கும். கண்ணனை விளித்துத் தந்தையின் பெயரைக் கேட்டால் 'பெரியசாமி' என்பான். முத்துவின் தந்தை 'கருப்பண்ணன்' என்பதையும், பாண்டியனின் தந்தை மாரிமுத்து என்பதையும் தெரிந்து கொண்டபின் கரும்பலகையில பெயர்களைப் பெ. Kannan; க. Muthu; மா. Pandiyan என்று எழுதிப்போடுவேன். எழுதும்போது மாணவர்கள் எல்லாம் சிரிப்பார்கள். ஆங்கிலத்தில் பெயரை எழுதும்போது தமிழில் முன்னெழுத்தைப்போடுவது தவறு என்பதால்தானே எல்லோரும் சிரிக்கிறீர்கள்? என்று கேட்டால் 'ஆம்' என்பார்கள். இதைப் போலவே தமிழில் பெயரை எழுதும்போது ஆங்கிலத்தில் முதலெழுத்தைப்போடுவது தவறில்லையா? என்று கேட்டால் பெரும்பாலோர் அமைதியாய் இருப்பார்கள். பன்னிரண்டு ஆண்டுகள் பள்ளிப்படிப்பை முடித்து வந்த அவர்கட்கு இப்படி எழுதுவது தவறு என்ற உணர்வே ஏற்படாத அளவுக்குப் பழக்கம் இறுகிப்போய்விட்டது. உரிய ஆசிரியர்கள் உணர்த்தாத குறை தான் இது. பெரும்பாலான ஆசிரியர்களே இப்படி எழுதுவது தவறு என்று உணராதபோது எப்படி உணர்த்துவார்கள்? தமிழில் எப்படி எழுதினால் என்ன என்று நெகிழ்ச்சிகாட்டும் தமிழர் பலரும் ஆங்கிலத்தில் இப்படித்தான் எழுதவேண்டும் என்று உறுதியாக இருக்கின்றனர்!

ஆங்கிலத்தில் முதலெழுத்துக்களைச் சுட்டித் தங்கள் பெயரைக் குறிப்பிடும் வழக்கம் அரசியல்வாதிகளாலும் திரைத் துறையினராலும் தான் அதிகமாகப் பரப்பப்படுகிறது. சிஆர்., சி.எஸ், சி.என்.ஏ, பி.ஆர்., எம்.கே., எஸ்.டி.எஸ், கே.ஏ.கே., ஆர்.எம்.வீ.,

என்றும் எம்.கே.டி. பாகவதர், கே.ஆர்.ஆர்., எம்.ஜி.ஆர்., எஸ்.எஸ்.ஆர்.. என்றும் வழங்கும் பெயர்கள் ஆங்கில மோகத்தின் ஒருவகை வெளிப்பாடாகத்தானே அமைகின்றன. உ.வே.சா., கி.ஆ.பெ., ம.பொ.சி., மு.வ. என்றாங்கு குறிப்பிடுவதுதானே தமிழ்முறை.

கா.ந. அண்ணாதுரை

1962 - 63. காரைக்குடி அழகப்பா கல்லூரிகளை இணைத்த தமிழ்மன்ற விழா! அதற்காக ஒரு மலர் வெளியிட்டனர். அம்மலரில் அறிஞர் அண்ணாவின் வாழ்த்துச் செய்தி இடம் பெற்றது. அதில் அண்ணாவின் பெயர் 'கா.ந. அண்ணாதுரை' என்று குறிக்கப்பட்டிருந்தது. 'காஞ்சிபுரம் நடராசன் அண்ணாதுரை' என்பது அதன் விரிவு. அதற்குமுன் 'சி.என்.' என்னும் முதலெழுத்துக்கள் 'கா.ந.' வாக மாற்றப்பட்டதை வேறு எங்கும் நான் கண்டதில்லை. இந்தத் தமிழ்ப்படுத்திய வழக்கிற்குக் காரணமானவர் என் பேராசிரியர் வசுப மாணிக்கனார் என்பதை அறிந்து மகிழ்ந்தேன்.

'வடக்கு வாழ்கிறது'

மாநிலக் கல்லூரியில் இந்திப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற நண்பர் முனைவர் சுந்தரம் அவர்களை 'என். சுந்தரம்' என்றே எல்லோரும் அழைப்போம். தமிழிலிருந்து இந்திக்கும் இந்தியிலிருந்து தமிழுக்கும் பல படைப்புகளைத் தந்தவர். பாரதி, மு.வ., கலைஞர் படைப்புகளையும் திருவாசகம், திருக்குறள் முதலியவற்றையும் இந்தியுலகுக்குக் கொண்டு சென்றுள்ளார். தில்லி, காசி நகரப் பதிப்பகங்கள் இவரின் படைப்புகளை வெளியிட்டுள்ளன. இறுதியாகக் கல்கத்தா 'சாந்திநிகேதன்' இவரின் திருவாசக மொழிபெயர்ப்பினை வெளியிட்டுள்ளது. 'என்.சுந்தரம்' என்று தன் பெயரை எழுதும் வழக்கமுள்ளவர் இவர். ஆனால் இந்த வடநாட்டுப் பதிப்பகத்தார் பலரும் இவரின்

பெயரை 'என். சுந்தரம்' எனப் போடமறுத்துவிட்டனர். மேலும் தந்தை பெயரைக் கேட்டு 'நாகேஸ்வர் சுந்தரம்' என்றும் 'நா. சுந்தரம்' என்றும் குறித்துள்ளனர். ஆங்கிலத்தில் முதல் எழுத்தைக் குறிப்பதை அவர்கள் சிறிதும் விரும்புவதில்லை என்றார் நண்பர். வடநாட்டுப் பதிப்பகத்தார் மிகத் தெளிவாக இருக்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

தமிழின் பல துறைகளிலும் தங்கள் தடங்களைப் பதித்த க.நா. சுப்பிரமணியம், நா. பார்த்தசாரதி ஆகியோர் தங்கள் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதும்போதும் முறையே 'ka.Naa' என்றும் 'Naa' என்றும் முதலெழுத்துக்களைக் குறித்தனர் என்பது பாராட்டி மனங்கொள்ளவேண்டிய நிகழ்வாகும். இந்த முறைதான் முறைப்படி எல்லோரும் பின்பற்ற வேண்டிய முறையாகும்.

தமிழில் ஒப்பம்

தமிழோடும் குறிப்பாகத் திருக்குறளோடும் தமிழர்களோடும் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோதே காந்தியடிகளுக்குத் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. அவர் மோ.க. காந்தி என்று தன் கையெழுத்தைத் தமிழில் போட்டுள்ளார். அதன் படப்படி சென்னை, குறளகத் தரைத்தளத்தில் காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

இதை என் மாணவர்களிடம் பன்முறை எடுத்துச்சொல்லிப் பார்க்கத் தூண்டுவதுண்டு. கல்லூரிப் பேரவைத் தேர்தல் வரும். மாணவர்களின் பெயர்களடங்கிய வாக்காளர் பட்டியல்கள் தேர்தல் அதிகாரிகளிடம் தரப்படும். அப்பட்டியல்களில் பெயருக்கு நேரே கையொப்பம் பெற்றுக்கொண்டு வாக்குச்சீட்டு வழங்கப்படும். எந்த மாணவனாவது தமிழில் ஒப்பமிட்டுள் ளானா? எனத் தேடிப்பார்ப்பது என் வழக்கம். அத்திப்பூத்தாற் போல் ஓரிரு மாணவர்கள் தமிழில் ஒப்பமிட்டிருப்பார்கள்.

பயிற்றாசிரியர் என்னும் வகையில் எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வகுப்பு மாணவர்கள் படிவங்களில் கையொப்பம்

வாங்கப் பலமுறை வருவதுண்டு. அவர்கள் ஒப்பமிடவேண்டிய இடங்களில் பெரும்பாலோர் தமிழில் இட்டிருப்பார்கள். என்னிடம் வரும் படிவங்களில் தமிழில் ஒப்பமிடும் இவர்கள் வேறுசில ஆசிரியர்களிடம் ஆங்கிலத்தில் ஒப்பமிட்டிருப்பதை நான் காண்பதுண்டு.

இளைய மாணவர்கள் நிலை அது. வளர்ந்த ஆசிரியர்களும் அலுவலர்களும் எப்படியிருக்கிறார்கள்? அரசு அலுவலர்கள் தமிழில் ஒப்பமிடவேண்டும் என்று ஓர் அரசாணை வந்து ஆண்டுகள் பல ஆகிவிட்டன. எனினும் செக்குமாடுகளைப் போலச் சிறிதும் மாற்றமின்றி ஆங்கிலத்தில் ஒப்பமிடும் அதிகாரிகள் பலர்! தமிழ்நாட்டின் ஆட்சிமொழி தமிழ் என அறிவித்து நாற்பதாண்டுகளுக்கு மேலாகிவிட்டது. தமிழில் ஒப்பமிடவேண்டும் என்று தனி ஆணை வேறு! இந்த நிலையிலும் ஒப்பத்தைக் கூடத் தமிழில் போடாத அதிகாரிகள்! அது போகட்டும். நமக்கு நாமே கேட்டுக்கொள்வோம். தமிழர்கள் தமிழில் ஒப்பமிடவேண்டும் என்று எதிர்பார்ப்பதில் என்ன தவறு? தமிழர்கள் தமிழில் ஒப்பமிடவில்லையென்றால் வேறு யார் தமிழில் ஒப்பமிடுவார்கள்? ஒப்பமிடுவதற்குக் கூட நம்மொழி தகுதியற்றது, தமிழில் ஒப்பமிடுவதால் நம் தரம் குறைந்து போகும், ஆங்கிலத்தில் ஒப்பமிடுவது அறிவுடைமைக்கு அடையாளம் என்று நாம் கருதுகிறோமா?

தண்டிக்க வேண்டும்

பல அலுவலகங்களுக்குச் செல்கிறோம். வங்கிகளுக்குப் போகிறோம். பல படிவங்களை நிரப்ப வேண்டியிருக்கிறது. படிவங்கள் ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கும் நிலையில் பெரிய மாற்றமில்லை. எனினும் சில அலுவலகங்களில் ஆங்கிலத்தோடு தமிழிலும் படிவங்கள் அச்சிடப் பெற்றுள்ளன. வரவேற்கத்தக்க மாற்றம் இது. ஆனாலும் அலுவலகங்களுக்கு வருபவர்களில் நூற்றுக்கு இரண்டு மூன்று பேர்களாவது தமிழில் படிவங்களை

நிரப்புவார்களா என்பது ஐயமே. சில வங்கிகளில் நான் தொடக்கத்தில் தமிழில் நிரப்பித் தந்தபோது ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். பின்னர்ச் சரியாகி விட்டது. ஆங்கிலத்திலேயே நிரப்பிப் பழக்கப்பட்ட நிலை! தமிழில் நிரப்பினால் ஒரு மாதிரியாக நினைப்பார்களோ எனும் தாழ்வுணர்ச்சி. அலுவலக நடைமுறைகள் பலவும் ஆங்கிலத்திலேயே அமைந்திருக்கும் அவலம்! இவற்றைப் புறந்தள்ளி எழுதுவோம் தமிழில்.

ஒருமுறை 'தமிழரசு' இதழின் அலுவலகத்துக்குச் சென்று அறிஞர் அண்ணா தொடர்பில் அரசு வெளியிட்ட ஒரு நூலை வாங்கினேன். பணம் செலுத்தியதும் புத்தகத்தோடு பற்றுச்சீட்டும் கொடுத்தார்கள். பற்றுச்சீட்டு முழுமையாகத் தமிழில் மட்டுமே அச்சிடப்பெற்றது. ஆனால் அதை நிரப்பியவரோ நூலின் பெயர் உட்பட அனைத்தையும் ஆங்கிலத்திலேயே எழுதியிருந்தார். தமிழிலுள்ள படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பித் தரும் இந்த அவலத்தை என்னென்பது? தமிழில் உள்ள படிவங்களைத் தமிழில் நிரப்பவேண்டும் என்னும் அடிப்படை ஒழுங்கைக் கூடக் கடைப்பிடிக்காதவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

'வாட்டர் வாட்டர்'

சென்னையிலிருந்து திருச்சிக்குச் செல்கிறேன். பேருந்து தாம்பரம் நிலையத்தில் நிற்கிறது. வண்டியைச் சுற்றி 'வாட்டர் வாட்டர்' என்னும் ஒலி கேட்கிறது. வெளியே ஆண்களும் பெண் களும் கைகளில் தண்ணீர்ப் பைகளை ஏந்தியவாறே கூவிக்கூவி விற்கின்றனர். தண்ணீர் விலைமதிப்புக்குரியதாக ஆனபிறகு 'வாட்டர்' ஆகிவிடுகிறது.

ஆங்கிலமே தமிழாகும் அவலம்

மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறையில் முருகேசன் என்றொரு ஏவலர் இருந்தார். அவரிடம் ஒருநாள் 'வரலாற்றுத் துறைக்குப்'

போய், பேராசிரியர் கௌரிசங்கர் இருக்கிறாரா என்று பார்த்துவாருங்கள் என்றேன். அவர் புரியாதவர் போல் நின்றார். "அதான் கடைசியிலே இருக்கே வரலாற்றுத் துறை அதிலே" என்று மீண்டும் சொன்னேன். அவர் விழித்தவாறே 'வரலாற்றுத் துறைனா' என்று இழுத்தார். அதான் Histort Department என்றேன். எளிதில் புரிந்துகொண்ட அவர் 'அப்படிச் சொல்லுங்க தமிழிலே' என்றாரே பார்க்கலாம். ஒரே சிரிப்புமயம்! ஏவலர் முருகேசனுக்குப் பலமுறை அறிமுகப்படுத்தப்பட்ட 'History Department' தான் தமிழ்! ஆங்கிலமே தமிழாகிவிடும் அவலம்!

உறவுப்பெயர் மயக்கம்

முன்னாள் மாணவர் ஒருவரை அவர் உறவினரோடு கடைவீதியில் கண்டேன். உறவினரை இவர் என் 'அங்கிள்' என அறிமுகப்படுத்தினார். அங்கிள் என்னும் சொல் மாமா, சிற்றப்பா, பெரியப்பா என்னும் பல பொருள் தருவதால் 'அங்கிள்னா' என்றேன். 'மன்னிக்கணும், என் சித்தப்பா' என்றார். இதைப்போலவே அத்தை, சின்னம்மா, பெரியம்மா ஆகியோரைக் குறிக்கும் 'ஆன்டி' என்னும் ஆங்கிலச் சொல்லும் பரவலாகப் படித்த இளைஞர்களால் பயன்படுத்தப்படுகிறது. அம்மா, அப்பா ஆகியோருடன் பிறந்த தெளிவான உறவுமுறை உடையவர்களைக் கூடப் பொதுமைப்படுத்தி வழங்கும் போக்கு நம் பண்பாட்டுக்குப் புறம்பானது. மேலும் அப்பா, அம்மாவுடன் பிறந்தவர்களை மட்டுமன்று நண்பர்களின் பெற்றோர்களையும் உறவு பாராட்டிப் பூசி மெழுகி அழைக்கும் பொதுச்சொற்களாக இவை மாறி விட்டன.

புத்தகத்தைக் காணோம்

கல்லூரி நூலகத்தின் ஒரு பகுதி என்னுடைய பொறுப்பி லிருந்தது. நூல் கேட்டு வரும் மாணவ மாணவியர் அனைவரும் 'எனக்கு Book வேணும், Book வேணும்' என்றே கேட்பார்கள்.

நான் திரும்பத் திரும்ப 'என்ன வேணும், என்ன வேணும்' என்று கேட்பேன். அவர்கள் மீண்டும் மீண்டும் 'Book, Book' என்றே சொல்வார்கள். புத்தகம் என்றோ நூல் என்றோ சொல்லக் கூடாதா என்று கேட்பேன். ஆனாலும் மாணவர்கள் எல்லோரும் 'Book' என்றே குறிப்பிடுகின்றனர். பள்ளிகளிலிருந்து பல்கலைக் கழக மாணவர்வரை நாட்டுப்புறங்களிலிருந்து நகர்ப்புற மாணவர் வரை எல்லா மாணவர்களுக்கும் 'Book' என்பதே நாவில் பழகிய செந்தமிழ் ஆகிவிட்டது.

கலப்படம்

*1961*இன் கோடை விடுமுறை. முதுகலை முதலாண்டை முடித்த நிலை. ஊரிலிருக்கிறேன். எங்கள் வயல் கரும்பைச் சாறுபிழிந்து சருக்கரை எடுப்பதற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆலை அமைத்து வேலை நடைபெறுகிறது. அந்த ஆலையின் உரிமையாளர் பள்ளி இறுதி வகுப்பும் தேறாதவர். அவர் மற்றவர்களுடன் பேசும்போது நிறைய ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுவார். 'Brother! உங்க Grand mother க்கு ரொம்ப Age ஆயிடுச்சுல்ல, Doctor கிட்ட health check up பண்ணுங்க' என்னும் முறையில் பேசுவார். அவர் பேச்சைக் கேட்ட என் அப்பாயி 'என்னப்பா, அந்தப் பையன் உன்னைவிட நிறைய படிச்சிருப்பான் போலிருக்கே, இங்கிலீசுலே என்னென்னமோ பேசுறான்' என்றார் என்னிடம். பிறமொழிச் சொற்களைக் கலக்காது பேசிய என்னையும் ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசிய அவரையும் ஒப்பிட்டுப் படிப்பறிவில்லாத என் அப்பாயி செய்த மதிப்பீடு முற்றிலும் தவறானது என்று சொல்லிவிடமுடியாது. ஆங்கிலச் சொற்களை எந்த அளவு மிகுதியாகக் கலந்து பேசுகிறோமோ அந்த அளவு நம்மை அறிவாளிகள் என்று மற்றவர் நம்புவர் என்னும் மயக்கம் படித்த பலரிடமும் குடிகொண்டிருக்கிறது. தாழ்வு மனப்பான்மை யடிப்படையில் செய்யப்படும் கலப்படம் இது.

விழாக்களில் வீழ்ந்த தமிழ்

தன் பேரப்பிள்ளைகளுக்குக் காதணி விழா! நண்பர் ஒருவர் அழைப்பிதழ் அனுப்பியிருந்தார். அழைப்பிதழ் ஆங்கிலத்தில் இருந்தது. காதணி விழாவை 'ear boring ceremony' என்று குறித்திருந்தார். காதைத் துளையிடும் காதுகுத்து நிகழ்ச்சிதானே! அணிகலன்போடுவது ஆங்கிலத்தில் வரவில்லை.

வங்கியில் ஏவலராக ஒரு தம்பி வேலை செய்தார். எங்கள் ஊர்ப்பகுதியைச் சார்ந்தவர். அவர்க்குத் திருமணம். அழைப்பிதழ் கொண்டுவந்தார். ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்தது. அதிலும் 'I requests' என்பது போன்ற இரண்டு மூன்று பிழைகள். பிழைகளைச் சுட்டிக்காட்டியபோது வேறொரு அழைப்பிதழைப் பார்த்து எழுதியதாகச் சொன்னார். தமிழில் அச்சிடக்கூடாதா என்றேன். ஊர்ப்பகுதியில் கொடுப்பதற்குத் தமிழில் அச்சிட்டிருக் கிறோம். நகர்ப்பகுதியிலும் நண்பர்களுக்கும் கொடுப்பதற்கு ஆங்கிலத்தில் அச்சிட்டேன் என்றார். உங்கள் நண்பர்களில் தமிழ் தெரியாதவர்கள் எவரும் இருக்கிறார்களா என்றேன், இல்லை என்றார். பின்னர் ஏன் ஆங்கிலத்தில் அச்சிடவேண்டும் என்றேன். 'படித்தவர்களுக்கு - வங்கியில் பணியாற்றுபவர்களுக்குக் கொடுப்பதற்காக என்றார்.' படித்தவர்களுக்குத் தமிழில் அழைப்பிதழ் கொடுப்பது தகுதிக்குறைவு என்பதாக ஓர் எண்ணம்!

தஞ்சையில் தமிழ்த்துறையில் என்னுடன் பணியாற்றிய நண்பர் ஒருவர். அவர் இல்லத்தில் நடந்த இரண்டு திருமண நிகழ்ச்சிகளுக்கும் ஆங்கிலத்தில் அழைப்பிதழ் அனுப்பியிருந்தார். தமிழனாகிய எனக்குத் தமிழராகிய அவர் அதுவும் தமிழ்த் துறையைச் சார்ந்த அவர் ஆங்கில அழைப்பிதழை அனுப்பி யிருக்கிறாரே என்று வருத்தப்பட்டேன். தமிழ் தெரியாதவர் களுக்கு, ஆங்கிலம் மூலம்தான் அறிவித்தாக வேண்டியவர்களுக்கு ஆங்கில அழைப்பிதழ் அனுப்புவது தவறில்லை. தமிழன் ஒருவன் இன்னொரு தமிழனுக்குத் தன் வீட்டுத் திருமண நிகழ்ச்சிக்கும்

ஆங்கிலத்தில் அழைப்பிதழ் அனுப்புவதுதான் மதிப்புமிக்கது என்று கருதும் சிந்தனைச் சீரழிவை என்னென்பது!

ஆங்கிலப்புற்று

கடற்கரைப் பகுதியில் காலையில் நடப்பேன். கரையை ஒட்டிய சாலையின் ஓரத்தில் ஒரு பகுதியில் குடிசைகள்! இன்னொரு பகுதியில் குடிசை மாற்று வாரிய வீடுகள்! அந்த வீடுகளின் முன்பு கோலங்கள் போடப்பட்டிருக்கும். எளிய மக்களின் கலையுணர்வை வியந்தவாறே நடைபயில்வேன். ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் விழாவின் போதும் புத்தாண்டு வரும்போதும் புதுப்புதுக் கோலங்கள் பூக்கும். அந்தக் கோலங்களின் நடுவிலோ ஓரப்பகுதிகளிலோ 'Wish you Happy Pongal' என்றும் 'Wish you Happy New Year' என்றும் ஆங்கில மொழியில் வாழ்த்து வரைந்திருப்பார்கள். 'தமிழர் திருநாள்' எனப்படும் பொங்கலுக்கு ஆங்கிலத்தில் வாழ்த்து! அதுவும் குடிசைப்பகுதிக் கோலங்களில்!

இதைப்பற்றி ஒரு நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தேன். இப்படி ஆங்கிலத்தில் வாழ்த்து வரைவதைத் தமிழ்நாட்டில் பல பகுதிகளிலும் காணலாம். எங்கள் கோவில்பட்டிப் பகுதியிலும் இத்தகைய கோலங்கள் இடம் பெறுவதுண்டு என்றார். ஆங்கிலப் பற்று/புற்று தமிழர்களின் மூளையில் இந்த அளவு ஊடுருவியிருக்கிறது!

தமிழும் நாமும் வளம் பெறுவோம்

இனிய தமிழர்களே!

இதுவரை நம் தமிழ்மொழி அன்றாட வாழ்வில் எவ்வாறு புறந்தள்ளப்படுகிறது என்பதைப் பட்டறிவு நிகழ்ச்சிகள் மூலம் பகிர்ந்து கொண்டோம். இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகளை நீங்களும் எதிர்கொண்டிருப்பீர்கள்.

ஒரு பொருளின் மதிப்பு என்பது அதன் பயன்பாட்டைப் பெரிதும் பற்றி நிற்கிறது. பயன்படாத பொருள் மதிப்பிழந்துபோகும். தமிழ்மொழி அன்றாட வாழ்விலும் புறக்கணிக்கப்படும் அவலம் படித்தவரிடையே பரவலாகி வருகிறது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நம் வாழ்வோடு, சிந்தனையோடு, பண்பாட்டு-நாகரிக வரலாற்றோடு பின்னிப் பிணைந்திருக்கும் மொழி புறந்தள்ளப்படும்போது முன்னேற்றம் முடம்பட்டுப்போகும்.

''தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை, தாய்மொழியைப் பாராட்டி வீழ்ந்த நாடும் இல்லை'' என்பார் அறிஞர் முத்துசிவன். ஓர் இனத்தின் முன்னேற்றத்தில் அதன் தாய்மொழி பெறும் இடம் பெரிது என்பது உலக வரலாறு.

'ஏணிபெற்றும் ஏறாத தமிழர்' என்பார் பாவேந்தர். வளமான தொன்மைமிக்க தமிழ் மொழிக்குச் சொந்தக்காரர்கள் நாம்.

செவ்வியல் மொழிகள் அல்லது உயர்தனிச் செம்மொழிகள் என்று குறிப்பிடப்படும் இலத்தின், எபிரேயம் (ஈப்ரு), கிரேக்கம், சமற்கிருதம் முதலிய மொழிகளுக்கு இல்லாத பெருமை நம் தமிழுக்கு உண்டு. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகப் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வரும் செவ்வியல் மொழி தமிழ் ஒன்றே என்பது உலக அறிஞர் துணிபு.

இன்று உலக அரங்கில் கோலோச்சுகிற மொழிகள் பலவும் உருவாகாத காலத்திலேயே வளமான இலக்கிய இலக்கணங்களைப் பெற்றிருந்த மொழி நம்மொழி. கிபி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன் ஆங்கிலம் இல்லை, கிபி. 9க்கு முன் பிரெஞ்சு இல்லை. கிபி. 10க்கு முன் உருசியம் இல்லை. பின்னர்த் தோன்றிய அந்த மொழிகளெல்லாம் பெருமைப் பெற்றது எவ்வாறு? அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்தோடு மொழிகளின் வளர்ச்சியும் இணைந்து சென்றது. செல்லும் இடமெல்லாம் தங்கள் மொழிகளைத் தூக்கிப் பிடித்தனர். ஆண்ட

இடங்களிலெல்லாம் மொழிகளையும் ஆளவிட்டனர். அறிவுத்துறை வளர்ச்சிகளெல்லாம் அன்னை மொழிகளுக்குச் சொந்தமாயின. மொழிகளும் வளம்பெற்றன. அவர்களும் முன்னேறினர்.

இந்திய மொழிகளில் பன்னாட்டு மொழியாக - இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய அயல் நாடுகளிலும் ஆட்சி அலுவல்களில் இடம்பெறும் மொழியாக விளங்குவது நம் தமிழ்மொழி. சிங்கப்பூருக்குச் சென்றால் மலாய், சீனம், ஆங்கிலம் ஆகியவற்றோடு தமிழும் எழுதப்பட்டிருக்கும் (பலகைகளைப் பார்க்கலாம்). இலங்கையிலிருந்து வரும் அஞ்சல்களில்கூடத் தமிழ் இடம்பெற்றிருக்கும். ''தமிழர் ஒரு மொழியினர் - பல நாட்டினர்'' என்பார் அறிஞர் வா.செ. குழந்தைசாமி.

இந்தியத் தேசிய இனங்களில் தமிழினத்துக்குள்ள தனிச்சிறப்பு இது. பல நாடுகளிலும் வழங்கிவரும் நம்மொழி அதன் தாய்நிலமாகிய தமிழகத்தில் புறந்தள்ளப்படுவது பொறுக்க முடியாதது.

வெண்ணெய்யை நிறைய வீட்டில் வைத்துக் கொண்டு வெளிக்கடைகளில் நெய்க்கு அலைவது அறிவுடைமையாகாது. வளமான தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் அயல் மொழிகளின் பின்னே அலைந்தலைந்து அழிதல் அழகன்று.

ஆட்சியில் தமிழ், கல்வியில் தமிழ், முறை மன்றத்தில் தமிழ், இசையரங்குகளில் - கோயில் கருவறைகளில் தமிழ் என்று குரல் கொடுத்து வருகிறோம். அவற்றோடு அன்றாட வாழ்வியல் நடைமுறைகளில் தமிழ் என்பதை எண்ணித் துணிந்து இறங்குவோம் செயலில்.

தமிழால் நாமும் நம்மால் தமிழும் வளம் பெறுவோமாக.

'தாழ்வுணர்ச்சி நீங்கும் தகைமைக்கண் தங்கிற்றே
வாழ்வுணர்ச்சி காணும் வழி

என்பது பாவாணர் மொழி.

நல்ல தமிழில் எழுதுங்கள்

'வாணிகர் தம் முகவரியை வரைகின்ற பலகையில் ஆங்கிலமா வேண்டும்?' என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே கேட்டார் பாவேந்தர். 'மாணுயர்ந்த செந்தமிழில் வரைக என அன்னவர்க்குச் சொல்லவேண்டும்' என்றும் அறிவுறுத்தினார். பல்லாண்டுகளாகப் பல்வேறு அமைப்புகள் வலியுறுத்திவந்தும் போதிய பயன் விளையவில்லை. இப்போது அரசே, ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறை அமைச்சரே இந்த முயற்சியில் முனைப்பாக ஈடுபட்டுள்ளார். எனினும் வாணிகர்கள் போக்கு வரவேற்கத்தக்கதாயில்லை. 'இதை நடைமுறைப்படுத்து. இல்லையென்றால் இந்தத் தண்டனை' என்றால் தவறாமல் செய்வார்கள்.

பெயர்ப்பலகைகளில் இடம் பெற வேண்டிய தமிழாக்கம் எப்படியிருக்கவேண்டும் என்பது பற்றிப் பல அமைப்புகள் பல்வேறு காலங்களில் சிறியதும் பெரியதுமாகிய பட்டியல்கள் வெளியிட்டுள்ளன. இப்போது அரசே ஒரு பட்டியல் வெளியிட்டுள்ளது. வாணிகர்கள் பயன்படுத்தவும் அவர்களைப் பயன்படுத்துமாறு வற்புறுத்தவும் பின்வரும் பட்டியல் துணைசெய்யும்.

இதை...	இப்படி!	இதை...	இப்படி!
ஏஜென்சி	முகவாண்மை	ஆட்டோமொபைல்ஸ்	தானியங்கிகள், தானியங்கியகம்
அக்ரோ செண்டர்	வேளாண் நடுவம்	ஆட்டோ சர்வீஸ்	தானிப் பணியகம்
அக்ரோ சர்வீஸ்	உழவுப்பணி, வேளாண்பணி	பேக்கரி	அடுமனை
ஏர்–கண்டிஷனர்	குளிர்பதனி, சீர்வளி	பேங்கர்	வைப்பகர், வங்கி
ஆர்ட்டிஸ்ட்	கலைஞன்	பேட்டரி சர்வீஸ்	மின்கலப் பணியகம்
ஆர்ட்ஸ்	கலையகம், கலைக்கூடம்	பசார்	கடைத்தெரு, அங்காடி
ஆஸ்பெஸ்டர்ஸ்	கல்நார்	பியூட்டி பார்லர்	அழகு நிலையம், எழில் புனையகம்
ஆடியோ செண்டர்	ஒலியகம், ஒலிநாடா மையம்	பீடா ஸ்டால்	மடிவெற்றிலைக்கடை
ஆட்டோ	தானி	பெனபிட் பண்ட்	நலநிதி

போர்டிங் லாட்ஜிங்	உண்டுறை விடுதி
பாய்லர்	கொதிகலன்
பில்டர்ஸ்	கட்டுநர், கட்டிடக் கலைஞர்
கேபிள்	கம்பிவடம், வடம்
கேப்ஸ்	வாடகை வண்டி
கபே	அருந்தகம், உணவகம்
கேன் ஒர்க்ஸ்	பிரம்புப் பணியகம்
கேண்டீன்	சிற்றுண்டிச் சாலை
சிமெண்ட்	பைஞ்சுதை, பசுங்காறை
சென்டர்	நடுவம், மையம்
கெமிக்கல்ஸ்	வேதிப்பொருட்கள்
சிட்பண்ட்	சீட்டுநிதி
கிளப்	மன்றம், கழகம்; உணவகம், விடுதி
கிளினிக்	மருத்துவ அகம்
காபி அவுஸ்	குளம்பியகம்
கலர் லேப்	வண்ணக்கூடம், வண்ண ஆய்வகம்
கம்பெனி	குழுமம், நிறுவனம்
காம்ப்ளக்ஸ்	வளாகம்
கம்ப்யூட்டர் சென்டர்	கணிப்பொறி நடுவம், கணினி நடுவம்
காங்கிரீட் ஒர்க்ஸ்	திண்காரைப் பணி
கார்ப்பரேஷன்	கூட்டு நிறுவனம்
கூரியர்	தூதஞ்சல்
கட்பீஸ் சென்டர்	வெட்டுத் துணியகம்
சைக்கிள்	மிதிவண்டி
டீலர்	விற்குநர்
டிப்போ	கிடங்கு, பணிமனை
டிரஸ் மேக்கர்	ஆடை ஆக்குநர்
டிரை கிளினர்ஸ்	உலர் சலவையகம்
எலக்ட்ரிக்கல்ஸ்	மின்பொருளகம்
எலக்ட்ரானிக்ஸ்	மின்னணுப் பொருளகம்
எம்போரியம்	விற்பனையகம்
எண்டர்பிரைசஸ்	முனைவகம்
பேக்டரி	தொழிலகம்
பேன்சி ஸ்டோர்	புதுமைப் பொருளகம்
பாஸ்ட் புட்	விரை உணா
பேக்ஸ்	தொலை எழுதி
பைனான்ஸ்	நிதியகம்
பர்னிச்சர் மார்ட்	அறைகலன் அங்காடி
கார்மெண்ட்ஸ்	உடைவகை
ஹேர் டிரஸ்சர்	முடி திருத்துபவர்
ஹார்டுவேர்ஸ்	வன்சரக்கு, இரும்புக்கடை
ஜுவல்லரி	நகை மாளிகை
லித்தோ பிரஸ்	வண்ண அச்சகம்
லாட்ஜ்	தங்குமனை, தங்கும் விடுதி
மார்க்கெட்	சந்தை, அங்காடி
மெடிக்கல்ஸ்	மருந்தகம், மருந்துக்கடை
நர்சிங் ஹோம்	நலம் பேணகம்
பேஜர்	விளிப்பான், அகவன்
பெயிண்ட்ஸ்	வண்ணெய்கள், வண்ணப் பூச்சு
பேப்பர் ஸ்டோர்	தாள் வகைப் பொருளகம், தாள் கடை
பாஸ்போர்ட்	கடவுச்சீட்டு
பார்சல் சர்வீஸ்	சிப்பம் செலுத்தகம், சிப்பம் அனுப்பகம்
பெட்ரோல்	கன்னெய், எரிநெய்
பார்மசி	மருந்தகம், மருந்தாக்ககம்
போட்டோ ஸ்டுடியோ	ஒளிப்பட நிலையம்
பிளாஸ்டிக் இண்டஸ்ட்ரி	நெகிழித் தொழிலகம்
பிளம்பர்	குழாய்ப் பணியாளர்
பிளைவுட்ஸ்	ஒட்டுப்பலகை
பாலி கிளினிக்	பலதுறை மருத்துவமனை, பல்துறை மருந்தகம்
பவர் லூம்	விசைத்தறி
பவர் பிரஸ்	மின் அச்சகம்
பிரஸ், பிரிண்டர்ஸ்	அச்சகம், அச்சுக் கலையகம்
ரெடிமேட் டிரஸ் சென்டர்	ஆயத்த ஆடையகம்
ரெஸ்டாரெண்ட்	தாவளம், உணவகம்
ரப்பர்	தொய்வை
சேல்ஸ் சென்டர்	விற்பனை நிலையம்
ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்	வணிக வளாகம்
ஷோ ரூம்	காட்சிக்கூடம்
சில்க் அவுஸ்	பட்டு மாளிகை
சோடா பேக்டரி	வளிநீர்த் தொழில்மனை, காலகம்
ஸ்டேஷனரி	மலிகை, எழுதுபொருள்
சப்ளையர்ஸ்	வழங்குநர்
டேனரி	தோல் பதனீட்டகம்
டிரேட்	வணிகம்
டிரேடர்ஸ்	வணிகர்
டிரேடிங் கார்ப்பரேஷன்	வணிகக் கூட்டிணையம்
டிரேவெல்ஸ்	பயண ஏற்பாட்டாளர்
வீடியோ	வாரொளியம், காணொளி
ஒர்க் ஷாப்	பட்டறை, பயிலரங்கு
ஜெராக்ஸ்	நகலம், படிபெருக்கி
எக்ஸ்ரே	ஊடுகதிர்

'பெயரில் எல்லாம் இருக்கிறது'

பெயரில் என்ன இருக்கிறது? என்று கேட்பவர்கள்கூட, தங்கள் குழந்தைக்குப் பெயர் சூட்டும்போது 'பெயரில் எல்லாம் இருக்கிறது' என்பதுபோலத் தூக்கிச் சீர்தூக்கிப் பெயரிடுவார்கள். உடலுக்கு முகம் போல உலகுக்குப் பெயர் அமைகிறது. மாந்தனை அடையாளப்படுத்துவதில் பெயரின் இடம் பெரிது.

திருமாவளவன், நெடுஞ்செழியன், இரும்பொறை என்று நல்ல தமிழ்ப் பெயர்கள் அமைந்த பண்டைக்காலம்!

விஜயாலயன், இராஜராஜன், இராஜேந்திரன் என வடமொழித் தாக்கம் ஓங்கிய இடைக்காலம். இசுலாமிய, கிறித்துவப் பிறமொழிப் பெயர்கள் பரவிய பிற்காலம்.

நாடு எந்தத் திசையில் நடைபயில்கிறது என்பதைப் பெயர்கள் வாயிலாகவே உணர்ந்து கொள்ளலாம். பரிதிமாற்கலைஞன், மறைமலையடிகள், அன்பழகன் முதலிய பெயர்கள் தமிழ் உணர்ச்சியின் வெளிப்பாடுகள்!

நான் கல்லூரிப் பணியைத் தொடங்கிய காலத்தில் நூறு மாணவர்கள் உள்ள வகுப்பில் முப்பது அல்லது முப்பத்தைந்து மாணவர்கள் பெயர் நல்ல தமிழில் இருக்கும். கல்லூரிப் பணியை முடிக்கப் போகும் இந்தக் காலத்தில் அந்தப் போக்கு மாறிப் பிறமொழிப் பெயர்கள் புதுவடிவில் கோலோச்சுகின்றன. நல்ல தமிழ்ப் பெயர்களின் எண்ணிக்கை நாளும் குறைந்து வருகிறது. பேயப்பன் என்பது ஒரு மாணவனின் பெயர். தமிழ்ப் பெயர்தான் என்றாலும் 'ஒருமாதிரியாக' இருக்கிறதே என்று மாற்றிக்கொள்ள உதவினேன். அவனோ 'பிரபு' என்று புதுப்பெயர் பூண்டான்.

தமிழ்நாடு அரசிதழைப் பார்த்தால் தமிழ்ப் பெயர்கள் பிறமொழிப் பெயர்களாக மாற்றம் பெறுவதைக் காணலாம். ஒருமுறை தமிழ்ச்செல்வி என்னும் பெண் 'சுஜாதா'வாக மாறிவந்ததைக் கண்டேன்.

'தமிழரின் தமிழ்க்குழந்தை தமிழ்ப்பெயர் பெறுதல் வேண்டும்' என்றார் பாவேந்தர். எழில்தமிழ்ப் பெயர்கள் ஏராளமாக இருக்கின்றன. நம் குழந்தைகளுக்கு நல்ல தமிழ்ப் பெயர்களைச் சூட்ட உதவும் வகையில் ஒரு சிறு பட்டியல் தரப்படுகிறது. பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பெண்பாற் பெயர்கள்

அகவழகி
அங்கயற்கண்ணி
அணிமணி
அணிமாலை
அணிவளை
அம்மணி
அமிழ்தம்
அமிழ்தமொழி
அரசி
அருட்செல்வி
அருண்மொழி
அருந்தமிழ்
அருவி
அருள்மணி
அருள்விழி
அருளரசி
அல்லி
அழகம்மை
அழகரசி
அழகி
அழகுநிலா
அழகுமணி
அழகோவியம்
அறிவம்மை
அறிவழகி
அறிவுச்செல்வி
அறிவுமணி
அறிவுமலர்
அறிவொளி
அன்பரசி
அன்பழகி
அன்பு
அன்புச்செல்வி
அன்புமணி
அன்னம்
அனிச்சம்
ஆடலரசி
ஆதிரை
ஆம்பல்
ஆயிழை
ஆற்றலரசி
இசைமொழி
இசையமுது
இசையரசி
இயலரசி
இளங்கிளி
இளங்குயில்
இளங்கொடி
இளநகை
இளம்தென்றல்
இளம்பிறை
இளவரசி
இளவழகி
இன்மொழி
உயிரோவியம்
எழில்
எழிலம்மை
எழிலரசி
எழிலோவியம்
எழிற்செல்வி
ஏந்திழை
ஏழிசை
ஐயை
ஒப்பிலம்மை
ஒப்பிலாமணி
ஓவியம்
ஓவியப்பாவை
ஒளிக்கொடி
ஒளிமணி

கட்டழகி
கண்ணம்மை
கண்ணழகி
கண்மணி
கதிர்மணி
கதிரழகி
கதிரொளி
கயல்விழி
கயற்கண்ணி
கருத்தழகி
கலைச்செல்வி
கலைமணி
கன்னல்
கனிமொழி
காவிரி
குடியரசி
குமரி
குயில்மொழி
குயிலம்மை
குயிலி
குறள்மொழி
குறிஞ்சி
சிலம்பரசி
சுடர்க்கொடி
சுடரொளி
சூடாமணி
செந்தாழை
செம்மலர்
செழுந்தேன்
சேயிழை
தமிழ்ப்பாவை
தமிழ்மணி
தமிழம்மை
தவமணி
தன்மானம்
தாமரை
திருமொழி
திருவரசி
தூமணி
தென்றல்
தேமொழி
தேனருவி
நகைமுத்து
நடையழகி
நன்முல்லை
நாமகள்
நிலவழகி
நிறைமொழி
நீலமலர்
பனிமலர்
பாமகள்
பாவரசி
பிறைநுதல்
புகழ்வடிவு
பூங்குழல்
பூங்கொடி
பூவரசு
பூவழகி
பூவிழி
பெண்ணரசி
பைங்கிளி
பைந்தமிழ்
பொற்கொடி
பொன்மணி
பொன்னி
மணிக்கொடி
மணிமொழி
மலர்க்கொடி
மலர்விழி
மலைமகள்
மலையரசி
மாதவி
மான்விழி
மின்னல்
மின்னொளி
முகில்
முத்துநகை
முத்துமணி
முல்லை
மெய்யம்மை
யாழ்மொழி
யாழினி
வடிவரசி
வடிவழகி
வளர்பிறை
வானம்பாடி
விடுதலை
விண்மீன்
வெண்ணிலவு
வெற்றிக்கொடி
வேய்ங்குழல்
வேல்விழி
வைகை

ஆண்பாற் பெயர்கள்

அடலேறு
அரசு
அரிமா
அருள்
அழகப்பன்
அழகன்
அன்பரசு
அறிவரசு
அறிவுக்கனல்
ஆசைத்தம்பி
ஆடலழன்
ஆளவந்தான்
இசையரசன்
இசைவாணன்
இயல்வாணன்
இராவணன்
இரும்பொறை
இலக்கணன்
இலக்கியன்
இளங்குமரன்
இளங்கோ
இளந்தமிழன்
இளம்பரிதி
இளவரசு
இனியன்
உலகப்பன்
உலகநம்பி
எழில்நிலவன்
எழில்மலை
ஒவியன்
கணியன்
கதிர்வாணன்
கரிகாலன்
கல்லாடன்
கலைவாணன்
கார்முகில்
காவிரிநாடன்
குடியரசு
குயிலன்
குமரன்
குறிஞ்சி
கூத்தன்
சித்திரவேலன்
சிலம்பன்
சீராளன்
சுடரொளி
செங்கதிர்
செந்தமிழ்
செம்பரிதி
செம்பியன்
செம்மல்
செழியன்
சேயோன்
சேரன்
சோழன்
தமிழ்க்கதிர்
தமிழ்க்கனல்
தமிழ்க்குமரன்
தமிழ்த்தென்றல்
தமிழ்நம்பி
தமிழ்மணி
தமிழ்மாறன்
தமிழ்முகிலன்
தமிழ்நாவன்
தமிழ்நாடன்
தமிழ்நிலவன்
தமிழ்நெஞ்சன்
தமிழ்வாணன்
தமிழப்பன்
தமிழழகன்
தமிழன்பன்
திருமறவன்
திருமாறன்
திருமுருகன்
திருவள்ளுவன்
திருவாணன்
தேவநேயன்
நக்கிரன்
நன்மாறன்
நாவளவன்
நாவேந்தி
பகலவன்
பகுத்தறிவு
பாண்டியன்
பாமகன்
பாவரசு
பாவாணன்
பாவிசைக்கோ
புகழேந்தி
பூங்குன்றன்
பூமணி
பூவரசன்
பொழிலன்
பொன்னிநாடன்
மடங்கன்
மணிமொழி
மருது
மறவன்
மாமல்லன்
மாறன்
முகில்
முகிலன்
முல்லைவாணன்
மெய்யப்பன்
யாழிசை
வல்லவன்
வள்ளுவன்
வளனரசு
வாணன்
விடுதலை
விடுதலைவிரும்பி
வெண்மணி
வெற்பன்
வெற்றிச்செல்வன்
வெற்றியழகன்
வெற்றிவேந்தன்
வேந்தன்

பொறிகள் இருபது

எடுத்த செயலைக் குறித்த பொழுதில்
முடித்தல் உயர்வின் முதல்.

இறுதியில் பார்க்கலாம் என்றே இருப்பின்
குறிதப்பிப் போதலும் கூடும்.

அடிஎண்ணி வைப்பான் அடைவான்முன் னேற்றம்
கொடிவளர்ச்சி நாள்தோறும் கூறு.

எண்ணம் செயலின் முதலே; பொழுதெல்லாம்
எண்ணி இருத்தல் இழுக்கு.

பேச்சே வினையாய்ப் பெருத்துப் பயனென்ன?
மூச்சுமட்டு முள்ள முடம்.

எண்ணுதல், பேசல் இவையிரண்டும் நற்செயல்கள்
பண்ணவே பண்ணவே தான்.

உண்ணல் புணர்தல் உழைத்தல் இவையுயிர்கள்
பண்ணும் பொதுவினைக ளே.

நண்ணிப் பிறர்க்குதவல், நாணல் பழிசெயற்கே
எண்ணும் மனிதன் இயல்பு.

சூழ்ச்சியே என்றுந் துணையென் றிருப்பவன்
வீழ்ச்சி விளம்புதல் வீண்.

நல்லவை நாடாமல் அல்லவை போற்றுவான்
வல்லிருட் கூகை வகை.

அய்யோ இருள்என் றலறாதே. சற்றைக்குள்
துய்யஒளி தோன்றும் துணை.

கண்ணில் ஒளியற்றார் காண்க கணக்கற்றார்
மண்ணில் அடைந்தனர் மாண்பு.

தொட்டால் சுடுகிறதே தூதூ நெருப்பென்பாய்
பட்டொளி உண்டே படிந்து.

உதிரும் சருகெண்ணி ஓலமிட வேண்டா;
புதியதளிர் பூத்திடும் பொன்.

பத்துப்பேர் கூடிப் பகலை இரவென்றால்
ஒத்துக்கொள் ளாதே. ஒதுக்கு.

இருபதுபேர் கூடி இரும்பைப்பொன் னென்றால்
ஒருவனாய் நின்றும் எதிர்.

இல்லாத ஒன்றை இருப்பதாய்ப் பேசுவோர்
பல்லோர் எனினும் பகை.

பொன்னின் ஒளியைப் புறத்தேபோய்த் தேடுவதா?
உன்சிறப்பை நீயே உணர்.

ஏச்சும் புகழ்ச்சியும் என்செய்யும்? உன்மன
வீச்சு விரிவடையுங் கால்.

தன்மதிப்பு வேண்டும்; உலகோர் தரும்மதிப்பு
உன்மதிப்பின் பின்னே உணர்.